மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 319, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

319—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***30547—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஊராட்சி ஒன்றியம், முள்ளண்டிரம் காலனி மற்றும் மேட்டுக்குடிசைப் பகுதிகளில் அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், முள்ளண்டிரம் காலனியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அங்கன்வாடி மையத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி சர்வே எண் 195-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, புதிய மையம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல், மேட்டுக்குடிசைப் பகுதியில் 2007 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்திற்கு சர்வே எண் 175-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட நிருவாகத்தின் அனுமதியுடன், சட்டமன்ற உறுப்பினர் நிதியின்மூலம் புதிய கட்டடம் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அங்கன்வாடி மையம் தொடர்பாக, மாண்புமிகு*

அமைச்சர் அவர்களிடம், இதே ஆரணி ஒன்றியத்திற்குட்பட்ட, நெசல் கிராமத்திற்குட்பட்ட தென்றல் நகரிலே, ஒரு அங்கன்வாடி மையம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துருவைப் பெற்று உடனடியாக நடைமுறைப் படுத்தப்படுமென்று சென்ற ஆண்டு சொல்லியிருந்தார். ஆனால், இன்றுவரையிலே அந்த அங்கன்வாடி மையம் கட்டப்படவில்லை. அதனை இந்த நிதியாண்டில் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூகநலத் துறையின்மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு ஊனத்தின் விழுக்காடு 65 சதவிகிதம் இருக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதை குறைத்து, மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலைகளை வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட முதல் கேள்விக்கு, இடம் தேர்வு செய்வதில், அங்கே இருக்கக்கூடிய பொது மக்கள், கட்டடம் கட்டுவதற்கு உரிய இடத்தை அரசுக்கு குறிப்பிட்ட காலத்தில் தராததால், கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது; இருந்தாலும், அரசு அலுவலர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உடனடியாக அந்த இடத்தில் மையம் கட்டுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த கேள்விக்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கக்கூடிய உப பொருட்களுக்காக அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், ரூ. 5.00 இலட்சம் தங்கள் நிதியிலிருந்து வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பயனாளிகளை உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கக்கூடிய வழிவகைகள். . .

2014 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அனுமதி இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கேள்வியாகப் போடச் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் நீங்கள் அதே கேள்வியை ஏன் கேட்கிறீர்கள்? மூல வினாவிற்குச் சம்பந்தமாக கேள்வி கேளுங்கள். மூல வினாவிற்குச் சம்பந்தமில்லாமல் கேட்காதீர்கள். அப்படிக் கேட்பதானால், தனிக் கேள்வியாகக் கேட்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனிக் கேள்வியாகக் கேளுங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வேறு தனிக் கேள்வி. மாற்றுத் திறனாளிகளைச் சட்டமன்ற உறுப்பினர்களே தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கு அரசில் வாய்ப்பு இருக்கிறதா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கின்ற துறை, வேறு துறை. இப்போது புதிதாக எழுப்பியிருக்கின்ற கேள்விக்கான துறை, வேறு துறை. ஆகவேதான், தனிக் கேள்வியாகப் போட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்தேன். இருந்தாலும்கூட, அவர் பாதியிலேயே விட்டுச்சென்றிருக்கிற அந்தக் கேள்விக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படக்கூடிய அந்த நிதியினைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர் மூலமாகவே பயனாளிகளைத் தேர்வு செய்துகொள்ளலாம் என்பதை சென்ற முறையே இந்தச் சபையிலே தெரிவித்து, இப்போது அதுதான் நடைமுறையிலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனால், பல சட்டமன்ற உறுப்பினர்கள் முறையான நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், சம்பந்தப்பட்ட பயனாளிகளின் பட்டியலை மாவட்ட மறுவாழ்வுத் துறை அலுவலரிடம் சென்று தருவீர்களென்று சொன்னால், உடனடியாக அவர்களுக்கு interview வைத்து, தேர்வு செய்யக்கூடிய நடைமுறை, தற்போது பின்பற்றப்பட்டு வருகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.*